II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 552 of 2023**

Deposition of witness for the Plaintiff/ PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 25.06.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Rukmaniammal | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆனது எனது கணவர் சண்முகத்தின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் சண்முகத்தின் தாயார் பெயர் லட்சுமி என்று உள்ளது என்றால் சரிதான். லட்சுமியின் கணவர் பெயர் கண்ணப்பன் என்று சொன்னார்கள். அவர் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். வா.சா.ஆ.2ல் தந்தை பெயர் காமகோட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் என் கணவரை வளர்த்தவர் ஆவார். என் கணவரின் ஆதார் அட்டையில் என் கணவரின் தந்தை பெயர் காமகோட்டி என்று தான் உள்ளது. காமகோட்டியின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்த பொழுது என் கணவரின் ஆதார் அட்டை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் வேறு ஆதாரம் எதுவும் கேட்கவில்லை. அப்போது வா.சா.ஆ.1 திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்தோமா என்றால் அதை கேட்கவில்லை. நான் காமகோட்டியின் வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனுவில் சண்முகத்தின் இயற்கை பெற்றோர்கள் பற்றி சொன்னோமா என்றால் இல்லை. காமகோட்டி மற்றும் பார்வதி தான் என் கணவரை வளர்த்து ஆளாக்கியவர்கள் ஆவார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வா.சா.ஆ.6 அறிவிப்பை பிரதிவாதிக்கு அனுப்பினோம் என்றால் சரிதான். அதில் காமகோட்டியின் இயற்கை

பெற்றோர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் காமகோட்டிக்கு பாத்தியப்பட்டது என்பதை வா.சா.ஆ.6ல் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)